# <u>குளச்சல் நகராட்சி</u>

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் செப்டம்பர் திங்கள் 20–ம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் : 1**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் கீழ்கண்ட விபரப்படி பயணப்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் மற்றும் பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|
| 1 | திரு. பி.கே.ரமேஷ், நகராட்சி பொறியாளர் | 5/2007<br>7/2007 | 345/–<br>329/– |
| 2 | திருமதி. எஸ். சுதா, நகரமைப்பு ஆய்வாளர் | 7/2007<br>8/2007 | 884/–<br>526/– |
| 3 | திரு. பி.ஆர். பாபு, உதவி திட்ட அமைப்பாளர் | 6/2007 | 285/– |
| 4 | திருமதி. ஆ.நிர்மலா ஜாய், இளநிலை உதவியாளர் | 7/2007<br>8/2007 | 323/–<br>140/– |
| 5 | திரு.எஸ்.ஜே.இராஜ் குமார், இளநிலை உதவியாளர் | 5/2007<br>7/2007 | 1138/–<br>280/– |
| 6 | செல்வி. கே. சாந்தி, வருவாய் உதவியாளர் | 7/2007 | 506/– |
| 7 | திருமதி. பிரேமா, சமுதாய அமைப்பாளர் | 7/2007 | 2367/– |
| 8 | திரு.வி.நடராஜா, அலுவலக உதவியாளர் | 7/2007 | 1321/– |
| 9 | திருமதி.கே. மீனாம்பாள், மகப்பேறு ஆயா | 7/2007<br>8/2007 | 416/–<br>312/– |

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்¦கலாம்.

**தீர்மானம் எண். 304 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக் கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 2</u>**

குளச்சல் நகராட்சிக்கு மாநில நிதி ஆணையம் மூலம் தார் சாலை அல்லது சிமின்ட் தளம் அமைப்பதற்கு ரூ. 2.96 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 24 வது வார்டில் காமராசர் சாலை குறுக்குத் தெருவில் சிமின்ட் சாலை அமைக்கும் பணிக்கு ரூ. 1,80,000/– மும் மற்றும் 1 –வது வார்டில் கல்லத்திவிளை பகுதியில் மண் சாலையை சிமின்ட் சாலையாக அமைக்கும் பணிக்கு ரூ. 1,20,000/– மும் இதில் ஒதுக்கீடு தொகை ரூ.2,96,000/– போக மீதி தொகையான ரூ. 4,000/– த்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 293 நாள் 31.07.2007–ல் ஒப்புதலளித்துள்ளதன் பேரில் 1–வது வார்டில் கல்லத்திவிளை பகுதியில் மண் சாலையை சிமின்ட் சாலையாக அமைக்கும் பணிக்கு 21.08.2007–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. இதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.எம்.மோகன் | : | 0.90 % மதிப்பீட்டை விட அதிகம்<br>( ரூ. 1,20,723.00 ) |
| 2 | திரு.சி.சிவதாணுமாலையன் | : | 0.02 % மதிப்பீட்டை விட குறைவு.<br>( ரூ. 1,19,628.51 ) |

இதில் திரு.சி.சிவதாணுமாலையன் என்பவர் 0.02% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**<u>அ.குறிப்பு</u>** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.சிவதாணுமாலையன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 305 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக் கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 3</u>**

குளச்சல் நகராட்சிக்கு மாநில நிதி ஆணையம் மூலம் தார் சாலை அல்லது சிமின்ட் தளம் அமைப்பதற்கு ரூ. 2.96 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 24 வது வார்டில் காமராசர் சாலை குறுக்குத் தெருவில் சிமின்ட் சாலை அமைக்கும் பணிக்கு ரூ. 1,80,000/– மும் மற்றும் 1–வது வார்டில் கல்லத்திவிளை பகுதியில் மண் சாலையை சிமின்ட் சாலையாக அமைக்கும் பணிக்கு ரூ. 1,20,000/– மும் இதில் ஒதுக்கீடு தொகை ரூ.2,96,000/– போக மீதி தொகையான ரூ. 4,000/– த்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 293 நாள் 31.07.2007–ல் ஒப்புதலளித்துள்ளதன் பேரில் காமராசர் குறுக்குத் தெருவில் சிமின்ட் சாலை அமைக்கும் பணிக்கு 21.08.2007–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. இதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.எம்.மோகன் | : | 0.36 % மதிப்பீட்டை விட குறைவு<br>( ரூ. 1,71,860.75 ) |
| 2 | திரு.சி.சிவதாணுமாலையன் | : | 5.82 % மதிப்பீட்டை விட அதிகம்.<br>( ரூ. 1,92,522.50 ) |

இதில் திரு.எஸ்.எம். மோகன் என்பவர் 0.36% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.எம்.மோகன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 306 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக் கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 4</u>**

குளச்சல் நகராட்சி – சுனாமி நிவாரணப்பணி திட்டத்தின்கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட காந்தி ஜங்சன் முதல் பீச் ஜங்சன் வரை வடிகால் ஓடை தோண்டும் போது கிடைக்கப்பெற்ற கருங்கல் மற்றும் Cut Stone களை பணியின் அவசரம் கருதி நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று இரண்டு முறை ஏலம் நடத்தியும் எவரும் மேற்படி கல்களை ஏலம் எடுக்க முன்வராத நிலையில் மூன்றாம் முறையாக 23.08.2007 அன்று மறு ஏலம் நடத்தியதில் திரு. பஞ்சாட்சரம், குளச்சல் என்பவரின் ரூ.2,500/–க்கான கூடுதல் ஏலக் கேள்வியினை ஏற்று நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>அ.குறிப்பு</u>** : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 307 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக் கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 5</u>**

குளச்சல் நகராட்சி குடிநீர் பிரிவில் பம்ப் ரூம் எண். II-ல் (மின் இணைப்பு எண்.PVI 449) 10 H.P. மோட்டார் பொருத்துவதற்கு கூடுதல் மின்பளு கேட்டு விண்ணப்பிக்கப்பட்டதன் பேரில் அதற்குரிய கட்டணம் ரூ. 9450/– செலுத்த மின்சார வாரியத்திடம் இருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகை மின்சார வாரியத்திற்கு செலுத்தவும், மேலும் இந்நகராட்சிக்குட்பட்ட சீம்பிளிவிளை பகுதியில் அமைந்துள்ள போர் வெல்லில் புதியதாக 10 H.P. மோட்டாருக்கான இணைப்பிற்காக ரூ. 9,450/– மின் வாரியத்திற்கு செலுத்தவும், கடிதம் பெற்றதின் பேரில் மேற்கண்ட தொகை ரூ.18,850/– TNEB –க்கு அவசியம் கருதி நகரின் குடிநீர் வினியோகத்தை மேம்படுத்திட மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவு செய்ததற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 308 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக் கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 6</u>**

குளச்சல் நகராட்சி தினசரி சந்தை ஏலம் தொடர்பான விளம்பரத்தை குமரி முரசு பத்திரிகையில் விளம்பரம் செய்த வகையில் சம்மந்தப்பட்ட விளம்பர நிறுவனத்திற்கு ( Sobhagya Advertising Service, Chennai) ரூ. 3,850/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 309 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக் கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 7**

குளச்சல் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவின்கீழ் இயங்கும் மினி லாறி டி.என்.74.–5507–க்கு 05.10.2007 –ல் தகுதி சான்று பெறுவதன் நிமித்தம் கீழ்கண்ட பழுதுகள் தற்போது லாறியில் உள்ளதால் இதை சீர் செய்து F.C. எடுத்திட பழுது நீக்கம் செய்திடவும், இதற்கான உத்தேச செலவு ரூ. 24,000/– க்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**லாறியில் உள்ள பழுதுகளின் விபரம் வருமாறு :**

1) சர்வீஸ்
2) பெயிண்டிங்
3) பர்ச் பின் மாற்றுதல்
4) ஒயரிங் செக்கப்
5) நான்கு வீல் பிரேக் லைனர் மாற்றுதல்
6) பேன் பெல்ட் மாற்றுதல்
7) இஞ்சின் ஆயில் மாற்றுதல்
8) ஆயில் பில்ட்டர், டீசல் பில்டர் மாற்றுதல்
9) பேலன்ஸ் ராடு பின், புஸ் மாற்றுதல்
10) செல்ப் மோட்டார் சர்வீஸ்
11) பிரேக் பூஸ்டர் மாற்றுதல்.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 310 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக் கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 8**

குளச்சல் நகராட்சி பொது சுகாதார பிரிவின்கீழ் இயங்கும் மினி லாறி டி.என்.74 Z-2339–க்கு தகுதி சான்று 17.09.2007–ல் முடிவடைகிறது. எனவே நகரின் சுகாதாரத்தை எண்ணி அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று 29.08.2007–ல் பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் விவரம் வருமாறு. :

| | | |
|---|---|---|
| 1 | மணி மோட்டார் ஒர்க்ஸ், ஒழுகினசேரி, நாகர்கோவில். : | ரு. 38,745/– |
| 2 | K.S.S.S. ஆட்டோமொபைல்ஸ், நாகர்கோவில். : | ரு. 43,125/– |

மேற்கண்டவற்றில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை கொடுத்துள்ள மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 311 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 9**

குளச்சல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின்கீழ் இயங்கும் மினி லாறி டி.என்.74–Z-8931–க்கு பழுதான மின்கலனை மாற்றி புதிய மின்கலம் பொருத்த வேண்டுவதால் நகரின் சுகாதாரத்தை எண்ணி அவசர அவசியம் கருதி நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று 03.09.2007–ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விபரம் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | ஆன்றனி பேட்ரி ஒர்க்ஸ், குளச்சல்.. : | ரு. 4,100/– |
| 2 | கென்னடி பேட்ரி ஒர்க்ஸ், நாகர்கோவில். | ரு. 4,300 |

மேற்கண்டவற்றில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை கொடுத்துள்ள ஆன்றனி பேட்ரி ஒர்க்ஸ், குளச்சல். விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கிடவும், பொது நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 312 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 10</u>**

குளச்சல் நகராட்சிக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25883/07/UPA3 நாள் 24.07.2007–ன்படி சொர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டம் 2007–08–ம் ஆண்டிற்கு கீழ்கண்ட பிரிவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | தனி நபர் மானியம் | ரூ. 35,750/– |
| 2 | பயிற்சி பிரிவு | ரூ. 39,000/– |
| 3 | பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்ற திட்டம் (DWCUA) | ரூ. 1,07,250/– |
| 4 | சிக்கன மற்றும் நாணய சங்கம் | ரூ. 79,000/– |
| 5 | சமுதாய அமைப்பு பிரிவு | ரூ. 53,000/– |
| 6 | கூலி வேலை வாய்ப்பு திட்டப்பிரிவு | ரூ. 1,13,000/– |
| | | **ரூ. 4,27,000/–** |

மேற்கண்ட ரூ. 4,27,000/– யில் தற்பொழுது ரூ. 1,57,000/– மட்டும் முதல் தவணையாக வரப்பெற்றுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 313 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 11</u>**

குளச்சல் நகராட்சி சுனாமி நிவாரணப் பணிகள் தொடர்பாக திட்ட இயக்குநர், நிவாரணப்பணிகள், சென்னை அவர்களின் கடிதம் எண். TRR-EAR-2/876/06 நாள் 05.09.2007–ன்படி கீழ்கண்ட பணிக்கான டெண்டர் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

| வ எண் | பணியின் விவரம் | ம.திப்பீட்டு தொகை | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மாதா காலனியில் 3 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுதல் மற்றும் 3 ஆழ்துளை கிணறுகள் அமைத்து நீரேற்றும் குழாய் பதித்தல். | 30.00 லட்சம் | திரு.M.M..கிளீட்டஸ் | ரூ.35,48,940/– மதிப்பீட்டை விட 19.87 % அதிகமாகவும், தற்போதைய விலை விகிதத்தை விட (பொதுப்பணித்துறை) 17.98% அதிகமாகவும் |

**<u>அ.குறிப்பு</u>** : பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 314 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 12</u>**

குளச்சல் நகராட்சிக்கு நகர்ப்புற கூலி வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் ரூ. 1,13,000/– (நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின் படி) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்பேரில் 50% நிதி குளச்சல் நகராட்சிக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இதன்படி நகராட்சி மன்றத் தலைவர் அவர்கள் அறிவுரைப்படி நகராட்சி பொறியாளர் இந்நகராட்சிக்குட்பட்ட உய்யாண்டிவிளையில் மழைநீர் வடிகால் ஓடை கட்டுவதற்கு ரூ. 1.25,000/–க்கான மதிப்பீடு சமர்ப்பித்துள்ளார். அதன்படி ரூ.1,25,000/– க்கு உய்யாண்டிவிளையில் மழைநீர் வடிகால் ஓடை கட்டும் பணியினை செய்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது. இதில் ஒதுக்கீடு போக மீதி தொகையினை பொது நிதியிலிருந்து செய்வதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் நகர்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்ட பணியினை துறை மூலம் செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 315 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 13**

இந்நகராட்சி குடிநீர் திட்டத்தின்கீழ் மரமடி சந்திப்பில் G.I. பைப் மாற்றி பழுதினை சரி செய்யவும், அண்ணாசிலை அருகில் உள்ள கழிப்பிடத்திற்கு செல்லும் P.V.C. பைப்பினை மாற்றி குடிநீர் வீணாகி செல்வதை தடுக்கும் விதமாகவும், மன்ற தீர்மானம் எண். 270 நாள் 23.07.2007 –ன்படி ரூ. 17,500/– க்கான மதிப்பீட்டிற்கு ஒப்புதலளிக்கப்பட்டதின் பேரில் 29.08.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.பி. தங்கமணி . : | 0.51% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ. 18,346.25) |
| 2 | திரு.சி. சந்திரசேகர் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு (ரூ. 17,215.28) |

இதில் திரு. சி.சந்திரசேகர் என்பவர் 0.06 மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி. சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 316 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சி வாகனமான ஜீப் திடீரென பழுதுபட்டதால் மேற்படி பழுதினை உடனடியாக சரிசெய்யும் விதமாக நகர்மன்ற தீர்மானம் எண். 296 நாள் 16.08.2007–ல் ரூ. 5,000/– க்கு அனுமதியளித்ததின் பேரில் 20.08.2007 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டன. அதன்பேரில் 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை

| | | |
|---|---|---|
| 1 | M/s. கோதை ஆட்டோமொபைல்ஸ், கே.பி. ரோடு, நாகர்கோவில். | ரூ. 5,355/– |
| 2 | M/s.S.G.J. ஆட்டோ கேர் ( P) லிட், Tvm Road. : | ரூ. 4,990/– |
| 3 | M/s. ஷஜு மோட்டார் ஒர்க்ஸ், குளச்சல். | ரூ. 5,170/– |

இதில் M/s.S.G.J.ஆட்டோ கேர் ( P) லிட் நிறுவனம் ரூ. 4,990/–க்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளது. இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.S.G.J. ஆட்டோ கேர் ( P) லிட்–ன் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம். மேலும் பணியின் அவசரம் கருதி நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 317 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சர்வே எண். A1-3/12–ல் 5 H.P. திறன் கொண்ட மோட்டார் அமைத்து மாவு அரைக்கும் இயந்திரம் நிறுவ அனுமதி கோரி மனுதார் திரு. ராஜரெத்தினம் என்பவரின் விண்ணப்பத்தின் மீது மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** 28.08.2007–ம் தேதிய துப்புரவு ஆய்வாளரின் அறிக்கையில் மேற்கண்ட இயந்திரம் நிறுவ பரிந்துரை செய்துள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 318 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சர்வே எண். B1-16/3, 4, 5, 6 – பொட்டல் விளையில் வசிக்கும் திரு. செல்லம் அவர்கள் மகன் திரு. லெனின் குமார், திரு.முடியப்பன் அவர்கள் மகன் திரு. ஜாண்சன், திரு. சகாயராஜ் அவர்கள் மனைவி திருமதி. பாத்திமா மேரி, திரு. வில்பிரட் அவர்கள் மனைவி திருமதி. றோசிலி, திரு. அந்தோணி அவர்கள் மனைவி திருமதி. ஜோசப்பின் திரு. சேகர் அவர்கள் மனைவி திருமதி. ஸ்ரீதேவி திரு.தம்பிராஜ் அவர்கள் மனைவி திருமதி. ஜெசிஜேனட் ஆகியோர்கள் சேர்ந்து தங்களுக்கு உரிய பட்டா நிலத்தில் பாதைக்கான இடத்தினை பொதுமக்களின் தேவைக்கு பொது ரோடு போடுவதற்கு வேண்டி நகராட்சி ஆணையாளர் அவர்கள் பெயரில்

தானமாக எழுதி கொடுத்துள்ளார்கள். மனுதாரர்களுக்குரிய பட்டா நிலத்தை நகராட்சியின் சொத்தாக ஏற்றுக்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 319 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தை வளாகத்தில் IDSMT திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாக கட்டிடங்கள் (கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் மற்றும் கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம்) 17.09.2007–ல் டெண்டர் மற்றும் பொது ஏலம் விடப்பட்டதில் கேட்கப்பட்ட உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி (மாத வாடகை) மற்றும் டெண்டர் விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| குத்தகை இனம் கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தின் தரைதளம் | உயர்ந்த பட்ச டெண்டர் தொகை | உயர்ந்த ஏலக் கேள்வி (மாத வாடகை) ரூ. | உயர்ந்த ஏலக் கேள்விதாரார் பெயர் |
|---|---|---|---|
| கடை எண். 1 | திரு. சசி ரூ. 1000/– | 3,250/– | திரு.ஆர்.தங்கப்பன் |
| கடை எண். 2 | டெண்டர் எவரும் இடவில்லை | 3,500/– | திரு.T.ஜெஸ்டின் செல்ல குமார் |
| கடை எண். 3 | டெண்டர் எவரும் இடவில்லை | 2,850/– | திரு. P. ராஜேஸ் |
| கடை எண். 4 | திரு. சாதிக் ரூ.1000/– | 3,100/– | திரு. M.கெபின் |
| கடை எண். 5 | திரு. சாதிக் ரூ.1100/– | 3,100/– | திரு. C.பால்ராஜ் |
| கடை எண். 6 | டெண்டர் எவரும் இடவில்லை | 2,800/– | திரு. பெனிட்டோ |
| கடை எண். 7 | திரு.அயூப்கான் ரூ.1,501/– | 3,500/– | திரு. L.R.ஜெயசேகர் |
| கடை எண். 8 | திருமதி.தேன்மொழி ரூ.1,153/– | 2,000/– | திருமதி.தேன்மொழி |
| கடை எண். 9 | திரு. தாசன் ரூ.1,400/– | 3,950/– | திருமதி.தேன்மொழி |
| கடை எண். 10 | டெண்டர் எவரும் இடவில்லை | 5,100/– | திரு.மோகன்லால் பாபு |
| கடை எண். 11 | திரு. ஜெயராஜ் ரூ. 1,500/– | 4,000/– | திரு.மோகன்லால் பாபு |
| கடை எண். 22 | எவரும் கலந்து கொண்டு ஏலம் கேட்கவில்லை | | |
| கடை எண். 23 | எவரும் கலந்து கொண்டு ஏலம் கேட்கவில்லை | | |
| கடை எண். 24 | எவரும் கலந்து கொண்டு ஏலம் கேட்கவில்லை | | |
| கடை எண். 25 | திருமதி.தேன்மொழி ரூ.1,397/– | 2,500/– | திருமதி.தேன்மொழி |
| கடை எண். 26 | திருமதி.தேன்மொழி ரூ.1,287/– | 3,450/– | திரு.முகம்மது றாபி |
| கடை எண். 27 | திருமதி.தேன்மொழி ரூ.1,239/– | 3,750/– | திரு.முகம்மது றாபி |
| கடை எண். 28 | திரு.எம்.சாதிக் பாட்சா ரூ.1,000/– | 2,000/– | திரு. ஆன்றனி ராஜ் |
| கடை எண். 29 | ஒருவர் மட்டுமே கலந்து கொண்டதால் ஏலக்கேள்வி எழவில்லை. | | |

| | | | |
|---|---|---|---|
| கடை எண். 30 | ஒருவர் மட்டுமே கலந்து கொண்டதால் ஏலக்கேள்வி எழவில்லை. | | |
| கடை எண். 31 | எவரும் கலந்து கொண்டு ஏலம் கேட்கவில்லை. | | |
| கடை எண். 32 | டெண்டர் எவரும் இடவில்லை | 2,400/– | திரு.அமல்தாஸ் |
| **கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம்** | | | |
| கடை எண். 4 | எவரும் கலந்து கொண்டு ஏலம் கேட்கவில்லை. | | |
| கடை எண். 5 | டெண்டர் எவரும் இடவில்லை | 2,500/– | திரு.சுரேஷ் குமார் |
| கடை எண். 6 | டெண்டர் எவரும் இடவில்லை | 2,200/– | திரு.அயூப்கான் |
| கடை எண். 7 | திரு. ஜெயராஜ் ரூ. 1,000/– | 3,150/– | திரு.அஜீஸ் ரகுமான் |
| கடை எண். 12 | டெண்டர் எவரும் இடவில்லை | 3,425/– | திரு. அசோகன் |
| கடை எண். 17 | எவரும் கலந்து கொண்டு ஏலம் கேட்கவில்லை. | | |
| கடை எண். 18 | எவரும் கலந்து கொண்டு ஏலம் கேட்கவில்லை. | | |
| கடை எண். 19 | எவரும் கலந்து கொண்டு ஏலம் கேட்கவில்லை. | | |
| கடை எண். 20 | எவரும் கலந்து கொண்டு ஏலம் கேட்கவில்லை. | | |
| கடை எண். 21 | ஒருவர் மட்டுமே கலந்து கொண்டதால் ஏலக்கேள்வி எழவில்லை. | | |
| கடை எண். 22 | எவரும் கலந்து கொண்டு ஏலம் கேட்கவில்லை. | | |
| கடை எண். 23 | எவரும் கலந்து கொண்டு ஏலம் கேட்கவில்லை. | | |
| கடை எண். 24 | எவரும் கலந்து கொண்டு ஏலம் கேட்கவில்லை. | | |
| கடை எண். 25 | எவரும் கலந்து கொண்டு ஏலம் கேட்கவில்லை. | | |
| கடை எண். 26 | எவரும் கலந்து கொண்டு ஏலம் கேட்கவில்லை. | | |
| கடை எண். 27 | எவரும் கலந்து கொண்டு ஏலம் கேட்கவில்லை. | | |
| கடை எண். 28 | டெண்டர் எவரும் இடவில்லை | 1,000/– | திருமதி. தேன்மொழி |
| கடை எண். 29 | எவரும் கலந்து கொண்டு ஏலம் கேட்கவில்லை. | | |
| கடை எண். 30 | எவரும் கலந்து கொண்டு ஏலம் கேட்கவில்லை. | | |
| கடை எண். 31 | எவரும் கலந்து கொண்டு ஏலம் கேட்கவில்லை. | | |
| கடை எண். 32 | திரு. ஜலாலுதீன் ரூ. 351/– | 1,250/– | திரு. ஜலாலுதீன் |

<u>அ.குறிப்பு</u> : (1) கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் கடை எண். 1, 2, 3, 4, 5, 6, 7 ,8, 9, 10, 11, 25, 26, 27,28 மற்றும் கடை எண்.32) உச்ச ஏலத் தொகையினை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

(2) கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் கடை எண்கள் 22, 23, 24, 29, 30, 31 ஆகியவற்றில் ஏலக் கேள்வி எழாததால் மறு ஏலம் விடலாம்.

(3) கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் கடை எண். 5, 6, 7, 12, 28, 32 உச்ச ஏலத் தொகையினை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

(4) கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் கடை எண்.4, 17 முதல் 27 வரை மற்றும் 29 முதல் 31 வரை ஏலக் கேள்வி எழாததால் மறு ஏலம் விடலாம்.

**தீர்மானம் எண். 320 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 18</u>

உதவி கோட்டப் பொறியாளர், மாநில நெடுஞ்சாலைத் துறை, தக்கலை அவர்களின் கடிதம் எண். 111/07/JDO நாள் 06.09.2007–ன்படி குளச்சல் நகராட்சிப் பகுதியில் கிழக்கு கடற்கரை சாலையில் அந்தோணியார் காலனியில் உள்ள கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி செய்வதற்கு மாநில நெடுஞ்சாலைத் துறையினரின் சாலையை

தோண்டுவதற்கு அனுமதி அளிப்பதற்கு ரூ. 7,800/– செலுத்தும்படி கோரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை செலுத்துவதற்கு மன்றத்தின அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
**தீர்மானம் எண். 321 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராசர் பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள 5 கடைகளை 17.09.2007 அன்று ஏலம் விடப்பட்டதில் ஒருவர் மட்டுமே கலந்து கொண்டதால் ஏலக்கேள்வி எழவில்லை. எனவே மறு ஏலம் விட மன்றம் முடிவு செய்யலாம்.
**அ.குறிப்பு :** மறு ஏலம் விட ஒப்புதல் வழங்கலாம்.
**தீர்மானம் எண். 322 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

குளச்சல் நகராட்சி அலுவலக வளாகத்தினுள் அமைந்துள்ள 7.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள குடிநீர் தொட்டி சேறும் சகதியுமாக இருந்ததால் அதனை சுத்தப்படுத்தவும், மேற்படி டாங்கினை சுற்றி வெளிப்புறம் முழுவதும் வர்ணம் பூசுவதற்கும் நகர்மன்றத் தீர்மானம் எண்.302 நாள் 16.08.2007–ன்படி ரூ. 45,000/– மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதின் பேரில் 11.09.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.பி. கோபி, | 9.24 % மதிப்பிட்டை விட அதிகம்<br>(ரூ.43,954/–) |
| 2 | திரு. கிருஷ்ணகுமார் | 0.001 % மதிப்பீட்டை விட குறைவு<br>(ரூ. 40,235.24) |

இதில் திரு.கிருஷ்ணகுமார் என்பவர் 0.001% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். மேந்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைநத ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.கிருஷ்ண குமார் என்பவருக்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
**தீர்மானம் எண். 323 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.21**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 16989/2007/டபிள்யூஎஸ்.1 நாள் 23.08.2007–ன்படி மழைநீர் சேகரிப்பு திட்டத்தின்கீழ் (Rain Water Harvesting) குளச்சல் நகராட்சிக்கு ரூ. 1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் குளச்சல் நகராட்சிக்கு குடிநீர் வினியோகம் செய்யப்படும் நீர் ஆதாரப் பகுதியான வெள்ளிப்பிள்ளையார் கோயில் முதல் பாலத்தன்கரை செல்லும் பாதையில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கும், அதற்காகும் செலவுத் தொகை ரூ. 1.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
**தீர்மானம் எண். 324 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.22**

இந்நகராட்சியில் சமுதாய அமைப்பாளராக பணிபுரியும் திருமதி. பிரேமா, பரமக்குடி நகராட்சியில் இருந்து மாறுதலாகி வந்த வகையில் பயண மாறுதல் படி ரூ. 1820/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**தீர்மானம் எண். 325 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.23**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.38839/07/பி2 நாள் 05.09.2007–ன்படி குளச்சல் நகராட்சிக்கு 12–வது நிதிக்குழு பரிந்துரையின்கீழ் 2007–2008–ம் ஆண்டிற்கு முதல் தவணைத் தொகையாக ரூ. 4,59,572/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 50 சதவீதம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கும் 25 சதவீதம் சாலைகள் மற்றும் வடிகால் ஓடை அமைக்கும் திட்டத்திற்கும், 25 சதவீதம் மின்சாரக்

கட்டணம் மற்றும் கணனி சம்மந்தமான பொருட்கள் வாங்குவதற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் சாலை மற்றும் வடிகால் ஓடை அமைக்க ரூ. 1,14,868/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பள்ளிரோட்டில் பெரியபள்ளி அருகில் சிறுபாலம் சேதம் அடைந்துள்ளதால் நீர் தேங்கி சுகாதாரக்கேடு ஏற்படும் நிலையில் உள்ளதாலும், பள்ளி ரோட்டில் வடிகால் மற்றும் சிறுபாலம் சீரமைக்க மதிப்பீடு தயார் செய்வதற்கு நகராட்சி மன்றத் தலைவர் அறிவுறுத்தியதின் பேரில் தளம் ஆய்வு மேற்கொண்டு ரூ. 1,20,000/–க்கு மதிப்பீடு தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. இந்தப் பணியினை 12–வது நிதிக்குழு பரிந்துரை 2007–2008–ன்கீழ் செய்வதற்கும், கூடுதல் தொகையினை பொதுநிதியில் செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 326 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.24</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.38839/07/பி2 நாள் 05.09.2007–ன்படி குளச்சல் நகராட்சிக்கு 12–வது நிதிக்குழு பரிந்துரையின்கீழ் 2007–2008–ம் ஆண்டிற்கு முதல் தவணைத் தொகையாக ரூ. 4,59,572/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 50 சதவீதம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கும் 25 சதவீதம் சாலைகள் மற்றும் வடிகால் ஓடை அமைக்கும் திட்டத்திற்கும், 25 சதவீதம் மின்சாரக் கட்டணம் மற்றும் கணனி சம்மந்தமான பொருட்கள் வாங்குவதற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு ரூ.2,29,736/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில்

(1) இந்திரா காலனியில் தற்போது குப்பைகள் கொட்டப்பட்டு வரும் குப்பைகளை மண்புழு உரம் தயாரிக்கும் கட்டமைப்பு ஏற்படுத்து வதற்காக தோண்டி அப்புறப்படுத்தும் பணி. : மதிப்பீடு ரூ. 1,25,000/–

(2) மண்புழு உரம் சேகரிக்கும் ஸ்டோர் ரூம், வாச்மேன் ஷெட் மின்வசதி மற்றும் தண்ணீர் வசதி செய்தல் பணி. : மதிப்பீடு ரூ. 1,10,000/–

இதில் வ.எண்.2–ல் ஒதுக்கீடு தொகை போக மீதித் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 327 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.25</u>**

குளச்சல் நகராட்சி பகுதிகளுக்கு 11 ஆழ்துளை கிணறுகளில் இருந்து நீர்மூழ்கி மோட்டர் மூலம் நகருக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதற்காக மின் மோட்டார்கள் தினமும் சுமார் 22 மணி நேரம் இயக்கப்படுகிறது. இதனால் மின்மோட்டார்கள் அடிக்கடி பழுதடைந்து வருகிறது. அதிலும் கீழ்கண்ட 6 ஆழ்துளை கிணறுகளில் உள்ள நீர் மூழ்கி மோட்டார்கள் அதிகமாக அடிக்கடி பழுதடைந்து வருகிறது.

(1) வெள்ளிப்பிள்ளையார் கோயில் கீழ்புறமுள்ள பீச் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு பம்பிங் செய்யும் ஆழ்துளை கிணறு எண். 1.
(2) சீம்பிளிவிளை அருகில் உள்ள சுனாமி காலனிக்கு பம்பிங் செய்யும் ஆழ்துளை கிணறு எண். 3
(3) வெள்ளிப்பிள்ளையார் கோயில் மேல்புறம் உள்ள வி.கே.பி.மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு பம்பிங் செய்யும் ஆழ்துளை கிணறு எண். 4
(4) வெள்ளிப்பிள்ளையார் கோயில் மேல்புறம் பீச் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு பம்பிங் செய்யும் ஆழ்துளை கிணறு எண். 5
(5) வி.கே.பி. பள்ளிக்கூடம் அருகில் உள்ள ஆழ்துளை கிணறு எண். 10 மற்றும் 11.

மோட்டார்கள் அடிக்கடி பழுதாவதை ஆராய்ந்ததில் ஆழ்துளை கிணற்றினுள் மண் சகதி அதிகமாக உள்ளது. ஆழ்துளை கிணறுகளை சுற்றி ஆழமான பள்ளம் காணப்படுகிறது. இதன் வழியாக மழைநீர் சேற்றுடன் ஆழ்துளை கிணறுகளில் செல்வதால் மோட்டார்களில் மண் ஏறி அடிக்கடி பழுதடைந்து வருகிறது. அதனை தடுப்பதற்கு ஆழ்துளை கிணறுகளை Flushing செய்து பள்ளத்தில் சரளை கற்களை இட்டு நிரப்பி ஆழ்குழாய் கிணற்றையும் நிலத்தில் இயங்கும் மின் மோட்டாரையும் பாதுகாத்திட பிளாட்பாரம் கட்ட தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 85,000/–க்கு நகர்மன்ற தீர்மானம் எண். 288 நாள் 31.07.2007–ன்படி அனுமதி அளிக்கப்பட்டதின்பேரில்

06.09.2007–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | திரு. சந்திரசேகர் | 0.09 % மதிப்பிட்டை விடகுறைவு. (ரூ.73,763/–) |
| 2 | திரு. பி. தங்கமணி | 2.68 % மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 75,820/–) |

இதில் திரு.சந்திரசேகர் என்பவர் 0.09 % மதிப்பிட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.
இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி. சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 328 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.26</u>**

குளச்சல் நகராட்சிப்பகுதியில் தினசரி குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. இதனால் கீழ்குறிப்பிட்டுள்ள இடங்களில் அமைந்துள்ள மின்மோட்டார்கள் அடிக்கடி பழுதடைந்து குடிநீர் விநியோகம் பாதிப்படைகிறது . எனவே சம்மந்தப்பட்ட பகுதிகளில் உள்ள மின் மோட்டார்களை சரி செய்வதற்கும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 44,200/–க்கும் மன்ற தீர்மான எண். 271 நாள் 23.07.2007–ல் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | இடத்தின் பெயர் |
|---|---|
| 1. | பாலத்தன் கரை பம்ப் அறையில் இருக்கும் 12.5 HP மோட்டார் பழுதடைந்ததை சரிசெய்தல் மற்றும் புதிதாக 1 அடி GI நிப்பிள் மாற்றுதல் |
| 2. | பர்ணட்டிவிளை போர்வெல் நம்பர் 4–ல் உள்ள 10 HP மோட்டார் அதிக அளவு தண்ணீர் உந்தாமல் இருப்பதை சரிசெய்தல். |
| 3. | வி.கே.பி. பள்ளியின் பக்கம் போர்வெல் நம்பர் 11–ல் உள்ள 10 HP மோட்டார் அதிக அளவு தண்ணீர் உந்தாமல் இருப்பதை சரிசெய்தல். |
| 4. | கொட்டில்பாடு போர்வெல் நம்பர் 1–ல் உள்ள 10 HP மோட்டார் அதிக அளவு தண்ணீர் உந்தாமல் இருப்பதை சரிசெய்தல். |
| 5. | வெள்ளிபிள்ளையார் கோயில் பக்கம் போர்வெல் நம்பர் 5–ல் உள்ள 10 HP மோட்டார் அதிக அளவு தண்ணீர் உந்தாமல் இருப்பதை சரிசெய்தல். |
| 6. | கொட்டில்பாடு போர்வெல் நம்பர் 3–ல் உள்ள 10 HP மோட்டார் அதிக அளவு தண்ணீர் உந்தாமல் இருப்பதை சரிசெய்தல். |

அதன்பேரில் 06.07.2007அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.
அதன் விபரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | திரு. சி. சந்திரசேகர் | 0.05 % மதிப்பிட்டை விடகுறைவு. (ரூ. 44,130/–) |
| 2 | திரு. பி. தங்கமணி | 4.68 % மதிப்பீட்டை விட அதிகம் (ரூ. 46,220/–) |

இதில் திரு.சந்திரசேகர் என்பவர் 0.05 % மதிப்பிட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.
இது மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி. சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 329 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.27</u>**

இந்நகராட்சியில் துப்புரவு அலுவலராக பணிபுரிந்து ஓய்வுபெற்ற திரு.சி.ஜோண்ஸ் சோபிதராஜ் என்பவரின் திருத்திய ஊதிய நிர்ணயம் தொடர்பாக உள்ளாட்சி நிதி தணிக்கை குழுவின் அறிவுரைப்படி இந்நகராட்சியில் பிடித்தம்

செய்து வைக்கப்பட்டிருந்த தொகையினை உடனே விடுவிக்குமாறு சென்னை, உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட தொகை அன்னாருக்கு விடுவிக்கப்பட்டது. இது தொடர்பாக வழக்கு செலவுத் தொகையில் ரூ. 10,000/– அரசு வழக்கறிஞரான திரு.டி .ஸ்ரீனிவாசன் என்பவருக்கு அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். மேலும் இது தொடர்பாக வழக்கு செலவுத் தொகையில் ரூ. 7,500/– வழக்கறிஞரான திரு.ஜே. ரவீந்திரன், சென்னை என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 330 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.28**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட இந்திரா காலனி பகுதியில் குப்பைகள் கொட்டப்படும் இடத்தில் 12–வது நிதிக்குழு பரிந்துரை திட்டத்தின்கீழ் (2006–2007) மண்புழு உரம் தயாரிக்கும் பணிக்கான உள்கட்டமைப்பு பணி நடைபெறறுக் கொண்டிருக்கிறது. மேற்படி இடத்தில் 10 தென்னை மரங்கள் பட்டு போய் பணி செய்வதற்கு இடையூறாக உள்ளது. எனவே பயனற்று பட்டுப்போன 10 தென்னை மரங்களை பொது ஏலம் விட்டு அப்புறப்படுத்த மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** ம;ன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 331 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 29**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 08.09.2007–ம் நாளைய கடிதத்தில் மத்திய அரசின் தகவல் தொழில் நுட்பத்துறையின் கீழ் இந்நகராட்சிக்கு குடிமக்கள் தகவல் வசதிகளை பெறுவதற்கு ஏதுவாக குடிமக்கள் தகவல் வசதி மையம் (Citizen Fecilitation Centre) ஒன்றினை உருவாக்குவதற்கான கணனி மற்றும் அது தொடர்பான பொருட்கள் விரைவில் வினியோகம் செய்யப்பட உள்ளதாகவும், எனவே இது தொடர்பாக நகராட்சியில் பணிபுரிந்து வரும் ஒருவரை மேற்படி தகவல் வசதி மையத்திற்கு பணியாற்றுவதற்கு ஏதுவாக உரிய பயிற்சி விரைவில் அளிக்கப்படும் எனவும் மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு.

**அ.குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 332 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண் : 30**

திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் 14.08.2007–ம் நாளைய கடிதத்தில் பாராளுமன்ற உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2007–2008–ன்கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து அனுப்ப கேட்கப்பட்டுள்ளது. விவரம் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | குளச்சல் நகராட்சி, கொட்டில்பாடு சர்ச் அருகில் நிழலகம் அமைத்தல். | மதிப்பீடு ரூ. 1.00 இலட்சம். |
| 2 | குளச்சல் நகராட்சி, மரமடியில் நிழலகம் அமைத்தல் | மதிப்பீடு ரூ. 0.75 இலட்சம். |
| 3 | குளச்சல் நகராட்சி, 8–வது வார்டில் மரமடி பகுதியில் ஓய்வறை கட்டுதல். | மதிப்பீடு ரூ. 2.00 இலட்சம். |

**அ.குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 333 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண் : 31**

திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் 14.08.2007–ம் நாளைய கடிதத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2007–2008–ன்கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து அனுப்ப கேட்கப்பட்டுள்ளது. விவரம் மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | குளச்சல் காணிக்கை மாதா சர்ச் பக்கம் படிப்பக கட்டிடம் கட்டுதல். | மதிப்பீடு ரூ. 3.00 இலட்சம். |

| | | |
|---|---|---|
| 2 | குளச்சல் நகராட்சி, கொட்டில்பாடு ஊரில் கலையரங்கம் கட்டுதல். | மதிப்பீடு ரூ. 2.00 இலட்சம். |
| 3 | குளச்சல் நெசவாளர் தெருவில் சிறு மின்விசை குடிநீர் திட்டம் அமைத்தல்.. | மதிப்பீடு ரூ. 1.00 இலட்சம். |

**அ.குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.
**தீர்மானம் எண். 334அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 32</u>
<u>நகராட்சி மன்றத் தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>

குளச்சலிலிருந்து திங்கள் நகர் இரணியல் வழியாக தக்கலை செல்வதற்கு பேருந்து ஒன்று இயக்க தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கோட்டம் (III) மேலாளர் அவர்களை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 335 ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

# <u>குளச்சல் நகராட்சி</u>

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் செப்டம்பர் திங்கள் 28–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் : 1**

இந்நகராட்சியில் ஆணையாளராக பணிபுரியும் திரு.மு.ஏ.லோகநாதன் அவர்கள் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னையில் இருந்து மாறுதலாகி வந்த வகையில் பயண மாறுதல் படி ரூ.3740/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 336அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

இந்நகராட்சியில் பொறியாளராக பணிபுரியும் திரு.பி.கே. ரமேஷ் அவர்கள் சேலம் மாநகராட்சியில் இருந்து மாறுதலாகி வந்த வகையில் பயண மாறுதல் படி ரூ.4590/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.337அலுவலகக்குறிப்பினை ஏற்றுக் கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 3</u>**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் Bore களில் Motor –கள் பழுதடைந்து குடிநீர் சீராக வினியோகம் செய்வதற்கு தடையாக உள்ளது.

(1) பாலத்தன்கரை Sump
(2) பர்னட்டிவிளை திருப்பில் உள்ள (மோட்டார் (எண்.10)
(3) சுனாமி போர்வெல் ( எண்.3)
(4) பீச் டாங்க் செல்லும் வெள்ளிப்பிள்ளையார் கோவில் கீழ் உள்ள போர்வேல் (எண். 1)
(5) பாலத்தன்கரை போர்வெல் ( எண். 7)
(6) பீச் டாங்க் செல்லும் வெள்ளிப்பிள்ளையார் கோவில் மேல் உள்ள போர்வெல் (எண்.5)
(7) வி.கே.பி. டாங்க் செல்லும் வெள்ளிப்பிள்ளையார் கோவில் மேல் உள்ள போர்வெல் (எண்.6)
(8) வி.கே.பி. பள்ளிக்கூடம் அருகில் (எண். 11)
(9) பர்னட்டிவிளை டாங்க் அருகில் (எண். 9)
(10) பாலத்தன்கரையில் உள்ள கிணறு (எண். 8)

மேற்கண்ட மோட்டார்கள் பழுதடைந்ததால் குடிநீர் வினியோகம் பாதிப்படைந்தது. ஆகவே அதனை சரிசெய்வதற்கும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 69,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.338 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

குளச்சல் நகராட்சிக்கு 12–வது நிதிக்குழு பரிந்துரைத் திட்டம் 2005–2006–ன்கீழ் கணனி சம்மந்தமான பொருட்கள் வாங்குவதற்கு இந்நகர் மன்றத் தீர்மானம் எண். 1318 நாள் 31.07.2006 மூலம் ரூ. 2.00 லட்சத்திற்கு அனுமதியளித்துள்ளது. அதன்படி 2 கம்யூட்டர்கள் மற்றும் 2 பிரிண்டர்கள் ரூ. 97,276/– க்கு வாங்கப்பட்டுள்ளது. இந்நிதியில் உதவி திட்ட அமைப்பாளர் தற்போதுள்ள U.P.S. –ல் உள்ள பேட்டரி மிகவும் பழுதடைந்துள்ளதால் 65 AH maintenance free பாட்டரி 10 எண்ணம் மற்றும் 1 லேசர் பிரிண்டர் தேவை எனவும்

குறிப்பிட்டுள்ளார். மேற்கண்ட பொருட்களுக்கு ஆகும் செலவுத் தொகை அனுமதியளிக்கப்பட்டுள்ள தொகைக்கு உள்ளே வருவதால் மேற்கண்ட பொருட்களின் பாட்டிரியினை ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்குவதற்கு ஏதுவாக 28.08.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அவை மன்றத்தின் பார்கைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | M/s. மைக்ரோ டெக் சிஸ்டம்ஸ்,<br>நாகர்கோவில். | ரூ. 61,900/- |
| 2 | M/s, டெக்டாம் கம்ப்யூட்டர்<br>(Tec Tom Computer)<br>நாகர்கோவில். | ரூ. 61,000/- |

இதில் M/s, டெக்டாம் கம்ப்யூட்டர் நிறுவனம், நாகர்கோவில் என்பவர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி ரூ. 61,000/–க்கு அளித்துள்ளார்.

**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ரூ. 61,000/– M/s, டெக்டாம் கம்ப்யூட்டர் நிறுவனம் , நாகர்கோவில் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.339 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

குளச்சல் நகராட்சியிலிருந்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின் கட்டண நிலுவைத் தொகை ரூ. 35,96,056/– (ரூபாய் முப்பத்தி ஐந்து இலட்சத்தி தொண்ணூற்றி ஆறாயிரத்தி ஐம்பத்தி ஆறு மட்டும்) செலுத்த வேண்டியுள்ளதாகவும், மேற்படி தொகையினை உடனே செலுத்தக் கேட்டும் நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், நாகர்கோவில் அவர்களின் கடிதம் எண். SE/KKEDC/NGL/AO/Rev//Rcs/A4/D.697/07நாள் 20.09.07 வரப்பெற்றுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கும், உரிய மேல்நடவடிக்கைக்கும்,

**அ.குறிப்பு :** மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.340 நகர்மன்றத்தின் 30.11.2006–ம் நாளைய 5–ம் எண் தீர்மானத்தின்படி சுனாமி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து மேற்படி மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையினை செலுத்துவதற்கு மீண்டும் தமிழக அரசினை வலியுறுத்திட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

குளச்சல் நகராட்சிக்கு 2005–2006 ஆம் ஆண்டின் 12–வது நிதிக்குழு பரிந்துரை திட்டத்தின்கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்திட 50% நிதி விடுவிக்கப்பட்டது. மேற்படி நிதியில் ( ரூ.12,63,442/–) கழிவுநீர் உறிஞ்சும் லாரி வாங்க நகர்மன்ற தீர்மானம் எண். 1318 நாள் 31.07.2006–ல் ஒப்புதல் தந்ததின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு 31.07.2006–ல் கடிதம் அனுப்பப்பட்டது. இதுவரை மேற்படி லாரி வாங்க அனுமதி கிடைக்கப் பெறாததால் தற்போது குளச்சல் நகரையொட்டியுள்ள உப்பளம் பகுதியில் 10 ஏக்கர் நிலம் மாவட்ட நிர்வாகத்திடமிருந்து திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த ஏதுவாக பெறப்படும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட பகுதியில் உள்கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு மேற்படி நிதியினை (ரூ.12,63,442/–) பயன்படுத்திக் கொள்ளவும், மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.341 அலுவலகக்குறிப்பினை ஏற்றுக் கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சியின் 12–வது நிதிக்குழு பரிந்துரையில் 25% கணினி பிரிவு மேம்பாட்டிற்கு கணினி பிரிவிற்கு தேவையான பொருட்கள் ( Toner, Accessories ) வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 15,000/–க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.342 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான உய்யாண்டிவிளையில் உள்ள பொது கழிப்பிடமானது பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ளது. உய்யாண்டிவிளை மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாய் இருப்பதாலும், பொதுமக்கள்

நலன் கருதியும் மேற்கண்ட கழிப்பறையை உடனே சரிசெய்திடவும், நகரராட்சி மன்றத் தலைவர் அவர்களின் அறிவுரைப்படி செப்டிக் டேங்கினை புதிதாக கட்டி கழிப்பிடத்தை மராமத்து பணி மேற்கொள்ளவும், மேற்படி பணியினை பொது நிதியில் செய்வதற்கும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.55,000/–க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.343 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 9</u>

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட துறைமுகத்தெருவில் நகராட்சிக்கு சொந்தமான கழிப்பிடம் எண். 1, 4 ஆகிய கழிப்பிடங்களில் தண்ணீர் குழாய்கள், தரைத்தளம், கதவுகள் மற்றும் லைட்டுகள் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. துறைமுகத்தெரு கழிப்பறை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் இப்பகுதி மக்களின் நலன் கருதியும், நகரின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டும், மேற்கண்ட பழுதான கழிப்பறை உடனடியாக சீர் செய்திட நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் அறிவுரையின் பேரில், மேற்கண்ட பழுதான கழிப்பறையை சீர் செய்திடவும், இதற்கான மதிப்பீடு ரூ. 80,000/–க்கும், பணியினை பொது நிதியில் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.344 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 10</u>

<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 19–ம் வார்டு உறுப்பினர் கொண்டு வரும் தீர்மானம்</u>

(1) 19–வது வார்டுக்குட்பட்ட நெசவாளர் பகுதி வடக்கு தெருவில் திரு.எம்.ஆபிரகாம் , கதவு எண். 22/91 அருகில் மின்கம்பம் நட்டு குழல் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) நெசவாளர் வடக்கு தெரு முழுவதும் சிமின்ட் தளம் முழுவதும் சேதம் அடைந்து போக்குவரத்துக்கும், பொதுமக்கள் நடந்து செல்வதற்கும் வசதியாக புதிய சிமின்ட் தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(3) நெசவாளர் தெரு காந்தி ஜங்சன் அருகில் மின்கம்பம் FI/34 ல் புதிய குழல் விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

(4) நெசவாளர் தெரு, வடக்கு தெருவில் மற்றும் தெற்கு தெருவில் வாகனத்தினால் அடிக்கடி விபத்து நடப்பதால் திரு.டி.டேவிட் A.D. பேங்க் அருகில் வீட்டு எண்.19/36 முன்பும், நெசவாளர் பகுதி தெற்கு தெருவில் (2) திரு.சுகுமாரன் டிரைவர், கதவு எண். 23/36 A முன்பும் (3) திரு.விக்டர் ஊனமுற்றவர் 19/80 எண் வீட்டின் முன்பும் வேகத் தடை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்.345 பொருள் எண்.10–ன் துணைப் பொருட்கள் அனைத்தும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் செப்டம்பர் திங்கள் 28–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் : 1**

தமிழ்நாட்டில் விரைவில் வடகிழக்கு பருவமழை துவங்கவுள்ள காரணத்தால் பொதுமக்கள் நலன் கருதியும், போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய தற்காப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும், இயக்குநர், பொது சுகாதாரம், சென்னை அவர்களின் கடிதம் எண். 71721/EPI/SI/07-08 நாள் 18.07.2007–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பாதுகாப்பான குடிநீரினை மழைக் காலங்களில் மக்களுக்கு வழங்குவதற்கு ஏதுவாக 1000 கிலோ பிளீச்சிங் பவுடர் பொறியியல் பிரிவு மூலம் பொது நிதியில் வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 19,000/– க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.346 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

குளச்சல் நகராட்சி குடிநீர் பிரிவில் பொதுமக்களின் நலன் கருதி 13 ஆழ்துளை கிணறுகளில் உள்ள நீரை சாம்பிள் எடுத்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் உள்ள சோதனை நிலையத்தில் தரத்தினை சோதனை செய்வதற்கும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ. 8000/– க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்.347 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 3**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தை வளாகத்தில் IDSMT திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாக கட்டிடங்கள் (கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் மற்றும் கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம்) 26.09.2007–ல் மறு ஏலம்/ டெண்டர் விடப்பட்டதில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி (மாத வாடகை) விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| குத்தகை இனம் **கலைஞர் கருணாநிதி வணிக வளாகம்** | உயர்ந்த பட்ச டெண்டர் தொகை | | உயர்ந்த ஏலக் கேள்வி (மாத வாடகை) ரூ. | உயர்ந்த ஏலக் கேள்விதாரர் பெயர் |
|---|---|---|---|---|
| கடை எண்.15 | டெண்டர் எவரும் இடவில்லை | | ஒருவர் மட்டுமே கலந்து கொண்டதால் ஏலக்கேள்வி எழவில்லை. | |
| கடை எண்.16 | “ | | வைப்புத் தொகை செலுத்தி எவரும் ஏலம் கேட்க முன்வரவில்லை. | |
| கடை எண்.17 | “ | | ஒருவர் மட்டுமே கலந்து கொண்டதால் ஏலக்கேள்வி எழவில்லை. | |
| கடை எண்.18 | “ | | “ | |
| கடை எண்.19 | “ | | “ | |
| கடை எண்.20 | “ | | “ | |
| கடை எண்.22 | டெண்டர் எவரும் இடவில்லை | – | ஒருவர் மட்டுமே கலந்து கொண்டதால் ஏலக்கேள்வி எழவில்லை. | |
| கடை எண்.23 | “ | 1510/– | திரு.எம். அப்துல் றசீத் | |

| | | | |
|---|---|---|---|
| கடை எண்.24 | “ | 1520/– | திரு. அபூபக்கர் சித்திக் |
| கடை எண்.29 | “ | 1510/- | திரு. றப்பேல் தாஸ் |
| கடை எண்.30 | “ | 1510/- | திரு. றப்பேல் தாஸ் |
| கடை எண்.31 | “ | -- | முன்வைப்பு தொகை செலுத்தி எவரும் ஏலம் கேட்க முன்வரவில்லை. |
| **கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம்** | | | |
| கடை எண். 1 | டெண்டர் எவரும் இடவில்லை | ஒருவர் மட்டுமே கலந்து கொண்டதால் ஏலக்கேள்வி எழவில்லை. | |
| கடை எண். 2 | “ | “ | |
| கடை எண். 3 | “ | முன்வைப்பு தொகை செலுத்தி எவரும் ஏலம் கேட்க முன்வரவில்லை. | |
| கடை எண். 4 | “ | ரூ. 1510/– | திரு.அப்துல் ரகுமான் அன்சாரி |
| கடை எண். 8 | “ | ஒருவர் மட்டுமே கலந்து கொண்டதால் ஏலக்கேள்வி எழவில்லை. | |
| கடை எண். 9 | “ | “ | |
| கடை எண். 10 | “ | “ | |
| கடை எண். 11 | “ | “ | |
| கடை எண். 13 | “ | “ | |
| கடை எண். 14 | “ | “ | |
| கடை எண். 16 | “ | “ | |
| கடை எண். 17 | “ | ரூ. 800/– | திரு. ஜெஸ்டின் செல்வ குமார் |
| கடை எண். 21 | | ரூ. 760/– | திரு. சோபின் பாபு |
| கடை எண். 29 | டெண்டர் எவரும் இடவில்லை | ரூ.900/– | திரு. சத்தியநேசன் |
| கடை எண். 30 | “ | ரூ.775/– | திரு.A.N. அஜயன் |
| கடை எண். 31 | “ | ரூ.765/– | திரு.சிவதாணுலிங்கம் |

**<u>அ.குறிப்பு</u>** : (1) கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் கடை எண்கள். 23, 24, 29, 30 உச்ச ஏலத் தொகையினை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

(3) கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் கடை எண்கள் 15, 16, 17, 18, 19, 20, 22, 31 ஆகியவற்றில் ஏலக் கேள்வி எழாததால் மறு ஏலம் விடலாம்.

(5) கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் கடை எண். 4–ல் உச்ச ஏலத் தொகையினை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

(6) கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் கடை எண்கள். 1, 2, 3, 8, 9, 10, 11, 13, 14, 16 ஆகியவற்றில் ஒருவர் மட்டுமே கலந்து கொண்டதால் ஏலக்கேள்வி எழவில்லை. கடை எண்கள் 17, 21, 29, 30, 31 ஆகியவற்றில் அரசு நிர்ணயித்த விலையை விட குறைவாக ஏலக் கேள்வி எழுந்ததாலும் மறு ஏலம் விடலாம்.

**தீர்மானம் எண். 348 – அலுவலகக்குறிப்பு 1, 2 மற்றும் 3 ஆகியன ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. அலுவலகக் குறிப்பு எண்.4–ல் கொடுக்கப்பட்டுள்ள கடை எண்கள்.1,2,3,8,9,10,11,13,14 மற்றும் 16 கடைகளை மீண்டும் ஏலம் விடலாம். கடை எண்கள் 17, 21,29,30 மற்றும் 31 ஆகிய கடைகள் கவியரசு கண்ணதாசன் வணிக வளாகத்தின் முதல்தள கடைகள். முதல்தள கடைகள் 16–ல் எஞ்சியுள்ள கடைகளை ஏலத்தில் கேட்பதற்கு எவருமே முன்வரவில்லை. மேலும் கலைஞர் கருணாநிதி வளாக கடைகளை போன்று கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடைகள் முதல் தளமாக இருந்தாலும், தரைதளமாக இருந்தாலும் டைல்ஸ் ஒட்டப்பட்ட கடைகளாக இல்லை. மேலும் கடையின் அளவு 8” x 10” மட்டுமே. ஆனால் கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடைகளின்**

**அளவுகள் தரைத்தளமாக இருந்தாலும், முதல் தளமாக இருந்தாலும் 8'' x 12'' , 10'' x 12'' மற்றும் 12'' x 12'' கொண்டவை. எனவே கவியரசு கண்ணதாசன் வணிக வளாக முதல்தள கடைகளின் (கடை எண்கள் 17, 21, 29, 30 மற்றும் 31) ஏலத் தொகையினை ஏற்றுக் கொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 4**

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள 5 கடைகளை 26.09.2007 அன்று மறு ஏலம் விடப்பட்டதில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

| குத்தகை இனம் | உயர்ந்த பட்ச டெண்டர் தொகை | உயர்ந்த ஏலக் கேள்வி (மாத வாடகை) ரூ. | உயர்ந்த ஏலக் கேள்விதாரர் பெயர் |
|---|---|---|---|
| கடை எண். 34 | டெண்டர் எவரும் இடவில்லை. | 1020/– | திரு.சி.எஸ். ராஜ் |
| கடை எண். 35 | “ | 1025/– | திரு.சி.எஸ். ராஜ் |
| கடை எண். 36 | “ | 1015/– | திரு.சி.எஸ். ராஜ் |
| கடை எண். 37 | “ | 1020/– | திரு.சி.எஸ். ராஜ் |
| கடை எண். 38 | “ | 1015/– | திரு.சி.எஸ். ராஜ் |

**அ.குறிப்பு :** காமராஜர் பேருந்து நிலைய கடை எண்கள் 34, 35, 36, 37, 38–ன் உயர்ந்த பட்ச ஏலக்கேள்வியினை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.349 அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

நகராட்சி மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி.